சார்பு நீதிமன்றம், தேனி

முன்னிலை: திருமதி. R. கீதா, B.A., B.L.,
சார்பு நீதிபதி, தேனி.

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் நாள் சனிக்கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண். 55/2015
(CNR No:TNTH03 – 000894 – 2015)

உள்

அசல் வழக்கு எண். 180/2008

M. ராஜா ... மேல்முறையீட்டாளர் / 2 ம் பிரதிவாதி

// எதிர் //

1. P. வீரத்தேவர் (இறப்பு)** ... 1 ம் எதிர்மனுதாரர்/வாதி
2. O. ஒச்சணத்தேவர் என்ற மொக்கையத்தேவர் (இறப்பு)* ... 2 ம் எதிர்மனுதாரர் / 1 ம் பிரதிவாதி
3. T. பிச்சைமணி *
4. R. ஜெயப்பிரியா *
5. P. திரவியம் * ... 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் / 2 ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்
6. V. ஒச்சம்மாள்**
7. V. ராஜேஸ்வரி**
8. V. ராணி**
9. V. முருகன்**
10. V. லஷ்மணன்**
11. V. கணேசன்**
12. R. முத்துச்சரம்**
13. மைனர் R. மகாஜனஸ்ரீ**

(அவர் தாயார் மற்றும் கார்டியன் 12 ம் எதிர்மனுதாரரான முத்துச்சரம் மூலம்)
... 6 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்கள் / 1 ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்

(3 to 5th Respondents are impleaded as per order passed in I.A.No.99/2017, dated:24.08.2017) *
(Amended as per order passed in I.A.No.156/2017, dated: 11.12.2017)*

(6 to 13th Respondents are impleaded as per order passed in I.A.No.3/2022, dated:19.03.2025) **
(Amended as per order passed in I.A.No.4/2025, dated: 25.03.2025)**

தாவா மேல்முறையீடு கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேனி அசல் வழக்கு எண். 180/2008 – ல் 31.03.2011ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மேல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கீழமை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் தகுநிலை :

<u>அசல் வழக்கு எண். 180/2008</u>

P. வீரத்தேவர் ... வாதி

// எதிர் //

1. O. ஒச்சணத்தேவர் என்ற மொக்கையத்தேவர்
2. M. ராஜா ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது இறுதி விசாரணைக்காக 28.10.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது, மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. குணாசக்திவேல், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. ராமகிருஷ்ணன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டறிந்து, விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும்,

இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

தீர்ப்புரை

இம்மேல்முறையீடானது, கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேனி அசல் வழக்கு எண்.180/2008 ல் 31.03.2011 ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் பெயரில் குறைவுற்ற அசல் வழக்கு 2 ம் பிரதிவாதி தரப்பில் கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தேனி அசல் வழக்கு எண்.180/2008 ல் 31.03.2011 ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய மேல்முறையீடு அனுமதிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 1 – ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அசல் வழக்கானது இந்தநிர் 1 ம் எதிர்மனுதாரர், வாதியாக இருந்து தாவா சொத்தினை பொறுத்து அடமான மீட்பு பரிகாரம் மற்றும் சுவாதீன பரிகாரம் வேண்டியும், அசல் வழக்கு 2 ம் பிரதிவாதியான இந்தநிர் மேல்முறையீட்டாளர் மற்றும் அசல் வழக்கு 1 ம் பிரதிவாதியான இறந்துபோன 2 ம் எதிர்மனுதாரர் ஒச்சணத்தேவர் என்ற மொக்கையத்தேவருக்கு எதிராக வழக்கிடப்பட்டுள்ளது.

3. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:

i) தாவா சொத்து தேனி தாலுகா அல்லிநகரம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், தாவா சொத்து ஆதியில் வாதியின் தகப்பனார்

பூச்சித்தேவர், வாதி மற்றும் வாதியின் தம்பி லட்சுமணத்தேவர் ஆகியோருக்கு கூட்டுப்பட்டாவின் மூலம் பாத்தியப்பட்டு, அனுபவித்து வந்ததில் 15.03.1968 ல் மேற்படி மூன்று நபர்களும் கூட்டாக சேர்ந்து ரூ.1,000/- க்கு பேச்சியம்மாள் என்பவருக்கு பதிவு அடமான மேடோவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்றும், மேற்படி பேச்சியம்மாள் தான் பெற்ற அடமான சொத்தை 28.02.1973 ல் ஒரு மாயத்தேவருக்கு பதிவு மேடோவர் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி மாயத்தேவர் 07.02.1975 ல் ஒரு ராமசாமி என்பவருக்கு தாவா சொத்தைப் பொறுத்து ஒரு பதிவு மேடோவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், இந்நிலையில் வாதியும் அவரது தம்பி மற்றும் அவரது தகப்பனார் ஆகிய மூவரும் மேற்படி தற்போதைய ஈடு மேடோவர் பெற்ற நபரான ராமசாமி வசம் மேலும் ரூ.500/- பெற்றுக்கொண்டு, மேற்படி தொகை ரூ.500/- க்கு பதிவு மேல் ஈடு பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி ஈடு கடன் மற்றும் மேல்ஈடு கடன் ஆகியவைகள் நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி வாதியின் தகப்பனார் பூச்சித்தேவர் இறந்துவிட்டார் என்றும்,

ii) இந்நிலையில் மேற்படி ராமசாமி 23.03.1977 ல் 1ம் பிரதிவாதியிடம் ஈடு தொகை ரூ.1,500/- யை பெற்றுக்கொண்டு, ஈடு மேடோவர் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி 1ம் பிரதிவாதி ஈடு மேடோவர் பெற்ற இரண்டு தினங்கள் கழித்து இந்த வாதியும் அவரது தம்பியான லட்சுமணத்தேவரும் சேர்ந்து மேலும் கடனாக ரூ.800/- யை பெற்றுக்கொண்டு, மேற்படி தொகைக்கு ஓர் மேல் ஈடு பத்திரம் மூன்று வருட கால கெடுவுக்கு எழுதி பதிவு செய்து

கொடுத்துள்ளார்கள் என்றும், மேலும், ஈடு பத்திரத்தில் வட்டிக்கு பதிலாக சொத்தின் மகசூல்களை 1ம் பிரதிவாதி அனுபவித்து வரவேண்டியது என குறிப்பிட்டு ஈடு பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி மூன்று வருட ஈடு காலக்கெடுவுக்குள் வாதியின் தம்பி லட்சுமணத்தேவர் 01.09.1979 ல் 1ம் பிரதிவாதியிடம் தனது பாகத்திற்குண்டான தொகை ரூ.1,150/- யை செலுத்தி அவரது பாகத்தை மட்டும் மீட்டுவிட்டு அதே தேதியில் 1ம் பிரதிவாதிக்கு பதிவு கிரையமும் கொடுத்துவிட்டார் என்றும், எனவே, 01.09.1979 ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் 1ம் பிரதிவாதிக்கு பிரிவிணையில்லாத பாதி பங்கு பாத்தியம் உள்ளது என்றும், மற்றொரு பாதி பங்கினை அடமானதாரர் என்ற கோதாவில் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும், கடந்த 2007 ம் வருடம் வாதி 1ம் பிரதிவாதியை அணுகி அடமானத்தொகை ரூ.1,150/- யை பெற்றுக்கொண்டு, அடமானத்தை ரத்து செய்து கொடுக்க கேட்டபோது 1ம் பிரதிவாதி வாதியின் பங்கு பாகத்தை குறைந்த விலைக்கு கேட்டார் என்றும்,

iii) வாதி தாவா சொத்தை விற்பதற்கில்லை என மறுத்துவிட்டார் என்றும், தொடர்ந்து பலமுறை துயர்ந்ததில் 1ம் பிரதிவாதி அடமானத் தொகையை பெற்றுக்கொண்டு, பதிவினை ரத்து செய்து கொடுக்க மறுத்துவருகிறார் என்றும், எனவே வாதி 30.07.2008 ல் 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதில் அது பெற்றுக் கொள்ளாமல் திரும்பி வந்துவிட்டது என்றும், பின்னிட்டு கடந்த 22.08.2008 ல் மீண்டும் 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதில் அதனை பெற்றுக்கொண்டு எந்த ஒரு பதிலும் 1ம் பிரதிவாதி

அனுப்பவில்லை என்றும், இந்நிலையில், வாதியின் மீதும் வாதியின் வாரிசுகள் மீதும் 2ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஒரு கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், தொடர்ந்து பலமுறை துயர்ந்ததில் 1ம் பிரதிவாதி அடமானத் தொகையை பெற்றுக்கொண்டு, பதிவினை ரத்து செய்து கொடுக்க மறுத்து வருவதால் தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி அனுபவித்து வருவதற்காக வாதிக்கு பின்நஷ்டி கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், 1ம் பிரதிவாதி 18.10.2007 ல் தன் மகனான 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து ஓர் பொய்யான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றும், மேற்படி பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், எனவே, வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>4. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

i) வாதியின் வழக்கு பொய்யும், தவறானதுமாகும் என்றும், வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இந்த பிரதிவாதியால் உண்மையென ஒப்புக்கொள்ளப்படும் விசயங்கள் தவிர மற்றவைகளை வாதியே கண்டிப்பாக ருசு செய்யக்கடமைப்பட்டவர் ஆவர் என்றும், 15.03.1968 ல் மேற்படி வாதியின் தகப்பனார் பூச்சித்தேவர், வாதி மற்றும் வாதியின் தம்பி லட்சுமணத்தேவர் ஆகியோருக்கு மூன்று நபர்களும் கூட்டாக சேர்ந்து ரூ.1,000/- க்கு பேச்சியம்மாள் என்பவருக்கு பதிவு

அடமான மேடோவர் எழுதிக் கொடுத்துள்ளனர் என்பது 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றும், மேற்படி பேச்சியம்மாள் தான் பெற்ற அடமான சொத்தை 28.02.1973 ல் ஒரு மாயத்தேவருக்கு பதிவு மேடோபர் எழுதி கொடுத்துள்ளார் என்பது 1ம் பிரதிவாதிக்கு தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கம் போட்டு பார்த்தபோது தான் தெரிந்தது என்றும், மேற்படி மாயத்தேவர் 07.02.1975 ல் ஒரு ராமசாமி என்பவருக்கு தாவா சொத்தைப் பொறுத்து ஒரு பதிவு மேடோபர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், இந்நிலையில் வாதியும் அவரது தம்பி மற்றும் அவரது தகப்பனார் ஆகிய மூவரும் மேற்படி தற்போதைய ஈடு மேடோவர் பெற்ற நபரான ராமசாமி வசம் மேலும் ரூ.500/- பெற்றுக்கொண்டு, மேற்படி தொகை ரூ.500/- க்கு பதிவு மேல் ஈடு பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்பது 1ம் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளப்படுகிறது என்றும்,

ii) மேற்படி ராமசாமி, 23.03.1977 ல் 1ம் பிரதிவாதியிடம் ஈடு தொகை ரூ.1,500/- யை பெற்றுக்கொண்டு, ஈடு மேடோபர் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்தபின்பு தான் வாதியின் தகப்பனார் பூச்சித்தேவர் இறந்த விபரம் தெரியும் என்றும், 25.03.1977 ல் வாதியும் அவரது தம்பியான லட்சுமணத்தேவரும் சேர்ந்து மேலும் கடனாக ரூ.800/- யை பெற்றுக்கொண்டு, மேற்படி தொகைக்கு ஓர் மேல் ஈடு பத்திரம் மூன்று வருட காலக்கெடுவுக்கு எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், தாவா அடமான சொத்தில் அவருடைய பிரிவினை இல்லாத பாதி பாகத்திற்கான அடமான கடன் பங்கிற்கான ரூ.1,150/- யை 1ம்

பிரதிவாதியிடம் செலுத்தி அவருடைய பிரிவினை இல்லாத பாதி பாக பங்கை அடமான மீட்பு செய்து கொண்டுள்ளார் என்றும், அதற்கான பதிவு ரசீது ஒன்றையும் 1ம் பிரதிவாதி மேற்படி லட்சுமணத்தேவருக்கு கொடுத்துள்ளார் என்றும், 01.09.1979 ல் தாவா மொத்த அடமான சொத்தின் 3 ஏக்கர் 54 செண்டில் வாதியின் தம்பி லட்சுமணத்தேவர் அவருக்கு ஏற்பட்ட பிரிவினை இல்லாத பாதி பாகம் பங்கு 177 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதிக்கு ரூ.500/- க்கு பதிவு கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி பதிவு கிரையப் பத்திரத்தில் கண்ட தாவா பிரிவினையில்லாத பாதி பாகம் பங்கு சொத்தைப் பொறுத்து வாதி ஆட்சேபனை செய்ய முடியாது என்றும், 15.02.1985 ல் வாதி தனக்காகவும், தன் மைனர் மக்கள் முருகன், இராமர், இலட்சுமணன் மற்றும் கணேசன் ஆகியோர்களுக்காகவும் கார்டியனாக இருந்து அவருடைய மீதமுள்ள பிரிவுபடாத பாதி பங்கு தாவா சொத்தை ரூ.3,000/- க்கு 1ம் பிரதிவாதியிடம் பதிவில்லாத கிரைய பத்திரப்படி கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரையத் தொகையில் அடமானக் கடன் தொகை ரூ.1,150/- ம் உள்ளடக்கம் என்றும்,

iii) ஆகவே, தாவா சொத்தைப்பொறுத்து 1ம் பிரதிவாதி முழு உரிமையாளர் ஆவார் என்றும், வாதி இவ்விபரத்தை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்தான 3 ஏக்கர் 54 செண்டில் வாதிக்கு நன்கு தெரிந்து 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்குரிய கிஸ்தி வரி வகையறாக்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி வரி செலுத்தி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருகிறார்

என்றும், இந்நிலையில், 18.10.2007 ல் ஒரு பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் தாவா சொத்தை 1ம் பிரதிவாதி தன் மகனான 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ளார் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து வாதி, 1ம் பிரதிவாதிக்கு 15.02.1985 ல் ஒரு பதிவில்லா கிரையப் பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துள்ளதால் மேற்படி சொத்தைப்பொறுத்து 1ம் பிரதிவாதியே முழுஉரிமையாளராவார் என்றும், ஒரு வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும் 15.02.1985 ல் வாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின்படி பார்த்தாலும் யாதொரு இடையூறுமின்றி சட்டவரம்பு காலத்திற்கு மேலாக 1ம் பிரதிவாதியின் தொடர்ந்த சுவாதீன அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருவதால் எதிரிடை அனுபவத்தின்படி இப்பிரதிவாதிக்கு சட்டப்படி பாத்தியப்பட்டதாகும் என்றும், எனவே, 1ம் பிரதிவாதி தன் மகனான 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் செல்லுபடியானதாகும் என்றும்,

iv) மேற்படி வாதி அடமான சொத்தின் அவருடைய பிரிவினையில்லாத பாதி பங்கைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு பதிவில்லாத கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு யாதொரு உரிமையும், பாத்தியமும் பின்தொடர்ச்சியும் இல்லை என்றும், வாதி தாவா சொத்தை திரும்பப் பெறும் உரிமையையும் இழந்துவிட்டார் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியின் நிலை அடமானம் பெற்றவர் என்பதிலிருந்து உரிமை மூலம் பெற்று முழுஉரிமையாளர் என மாறிவிட்டது என்றும், இதேநிலை தான் 2ம் பிரதிவாதியைப் பொறுத்து

சட்டப்படி ஊர்ஜிதத்தில் இருக்கின்றது என்றும், எனவே 1ம் பிரதிவாதி தன் மகனான 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லுபடியானதும் அது வாதியை கட்டுப்படுத்தக்கூடியதுமானது என்றும், வாதியின் வழக்கறிஞர் அறிவிப்புக்கு 1ம் பிரதிவாதி 01.09.2008ல் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய யாதொரு முகாந்திரமும் இல்லை என்றும், வழக்கில் சொல்லியுள்ள வழக்குமூலங்களும் தவறானவையாகும் என்றும், வழக்கு சட்ட காலத்தைக் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வாதிக்கு அவர் கோரும் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே வாதியின் வழக்கை 1ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:

i) வாதியின் வழக்கு பொய்யும், புரட்டும் கற்பனையானதுமாகும் என்றும், வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இந்த பிரதிவாதியால் உண்மையென ஒப்புக்கொள்ளப்படும் விசயங்கள் தவிர மற்றவைகளை வாதியே கண்டிப்பாக ருசு செய்யக்கடமைப்பட்டவர் ஆவர் என்றும், வாதிக்கு அவர் கோரும் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றும், 15.03.1968ல் மேற்படி வாதியின் தகப்பனார் பூச்சித்தேவர், வாதி மற்றும் வாதியின் தம்பி லட்சுமணத்தேவர் ஆகியோருக்கு மூன்று நபர்களும் கூட்டாக சேர்ந்து

ரூ.1,000/− க்கு பேச்சியம்மாள் என்பவருக்கு பதிவு அடமான மேடோவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்பது 2ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றும், மேற்படி பேச்சியம்மாள் தான் பெற்ற அடமானச் சொத்தை 28.02.1973ல் ஒரு மாயாண்டித்தேவருக்கு பதிவு மேடோவர் எழுதிக் கொடுத்துள்ளார் என்பது 2ம் பிரதிவாதிக்கு தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கம் போட்டு பார்த்த போது தான் தெரிந்தது என்றும், மேற்படி மாயாண்டித்தேவர் 07.02.1975ல் ஒரு ராமசாமி என்பவருக்கு தாவா சொத்தைப் பொறுத்து ஒரு பதிவு மேடோவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், இந்நிலையில் வாதியும் அவரது தம்பி மற்றும் அவரது தகப்பனார் ஆகிய மூவரும் மேற்படி ராமசாமி வசம் மேலும் ரூ.500/− பெற்றுக்கொண்டு, மேற்படி தொகை ரூ.500/− பதிவு மேல் ஈடு பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்பது உண்மை என ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றும்,

ii) மேற்படி ராமசாமியிடம் 23.03.1977ல் 1ம் பிரதிவாதியிடம் ஈடு தொகை ரூ.1,500/− யை செலுத்தி விட்டு, ஈடு மேடோவர் பத்திரம் எழுதி பதிவு செய்து பெற்ற பின்பு தான் வாதியின் தகப்பனார் பூச்சித்தேவர் இறந்த விபரம் 1ம் பிரதிவாதியான என் தந்தைக்கு தெரியும் என்றும், அதன் பின்னர் தான் 25.03.1977ல் வாதியும் அவரது தம்பியான லட்சுமணத்தேவரும் சேர்ந்து மேலும் கடனாக ரூ.800/− யை பெற்றுக்கொண்டு, மேற்படி தொகைக்கு ஓர் மேல் ஈடு பத்திரம் மூன்று வருட காலக்கெடுவுக்கு எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், தாவா அடமானச் சொத்தில் அவருடைய பிரிவினை இல்லாத பாதி பாகத்திற்கான அடமான கடன்

பங்கிற்கான ரூ.1,150/- யை 1ம் பிரதிவாதியிடம் செலுத்தி அவருடைய பிரிவினை இல்லாத பாதி பாக பங்கை அடமான மீட்பு செய்து கொண்டுள்ளார் என்றும், அதற்கான பதிவு ரசீது ஒன்றையும் 1ம் பிரதிவாதி மேற்படி லட்சுமணத்தேவருக்கு கொடுத்துள்ளார் என்றும், 01.09.1979 ல் தாவா மொத்த அடமான சொத்தின் 3 ஏக்கர் 54 செண்டில் வாதியின் தம்பி லட்சுமணத்தேவர் அவருக்கு ஏற்பட்ட பிரிவினை இல்லாத பாதிப் பாகம் பங்கு 1 ஏக்கர் 77 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதிக்கு ரூ.500/- க்கு பதிவு கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி பதிவு கிரையப் பத்திரத்தை வாதி ஆட்சேபனை செய்யவில்லை என்றும், 15.02.1985 ல் வாதி தனக்காகவும், தன் மைனர் மக்கள் முருகன், இராமர், இலட்சுமணன் மற்றும் கணேசன் ஆகியோர்களுக்காகவும் கார்டியனாக இருந்து அவருடைய மீதமுள்ள பிரிவுபடாத பாதிப் பங்கு தாவா சொத்தை தனது குடும்ப செலவிற்காகவும் சில்லரைக் கடன் தீர்க்கவும் ரூ.3,000/- க்கு 1ம் பிரதிவாதியிடம் பதிவில்லாத கிரையப்பத்திரப்படி கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரையத் தொகையில் அடமானக் கடன் தொகை ரூ.1,150/- ம் உள்ளடக்கம் என்றும், ரூ.1,850/- குடும்ப செலவிற்கும் மைனர்களின் பராமரிப்பிற்காகவும் கிரையம் செய்துள்ளார் என்றும்,

iii) ஆகவே தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி முழு உரிமையாளர் ஆவார் என்றும், வாதி இவ்விபரத்தை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்தான 3 ஏக்கர் 54 செண்டில் வாதிக்கு நன்கு தெரிந்து 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்குரிய

கிஸ்தி வரி வகையறாக்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி வரி செலுத்தி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றும், இந்நிலையில் 18.102007ல் ஒரு பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் தாவா சொத்தை 1ம் பிரதிவாதி தன் மகனான 2ம் பிரதிவாதியாகிய எனக்கு எழுதி வைத்துள்ளார் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து வாதி, 1ம் பிரதிவாதிக்கு 15.02.1985ல் ஒரு பதிவில்லா கிரையப் பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துள்ளதால் மேற்படி சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியே முழு உரிமையாளராவார் என்றும், மேற்படி ஆவணம் வாதியையும் அவரது வாரிசுகளையும் கட்டுப்படுத்தும் என்றும், எனவே, 1ம் பிரதிவாதி தன் மகனான 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் செல்லுபடியானதாகும் என்றும், மேற்படி வாதி அடமானச் சொத்தின் அவருடைய பிரிவினையில்லாத பாதிப் பங்கைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு பதிவில்லாத கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு யாதொரு உரிமையும், பாத்தியமும் பின்தொடர்ச்சியும் இல்லை என்றும், வாதி தாவா சொத்தை திரும்பப் பெறும் உரிமையையும் இழந்துவிட்டார் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியின் நிலை அடமானம் பெற்றவர் என்பதிலிருந்து உரிமை மூலம் பெற்று முழு உரிமையாளரர் என மாறிவிட்டது என்றும், இதேநிலை தான் 2ம் பிரதிவாதியைப் பொறுத்து சட்டப்படி ஊர்ஜிதத்தில் இருக்கின்றது என்றும், எனவே 1ம் பிரதிவாதி தன் மகனான 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லுபடியானதும் அது வாதியை கட்டுப்படுத்தக்கூடியதுமானது என்றும்,

iv) தாவா வழக்கில் வாதியின் தம்பி லட்சுமணத்தேவர் கூட்டு ஒத்திதாரர் மற்றும் அவரது பாதி பங்கை கிரையம் கொடுத்தவர் என்பதினால் அவர் இவ்வழக்கிற்கு அவசியக் கட்சிக்காரர் ஆவார் என்றும், அவரை கட்சி சேர்க்காததால் வழக்கு அவசியமான கட்சிக்காரரை கட்சி சேர்க்காத தோஷத்திற்கு உட்படுகிறது என்றும், 18.10.2007 ல் ஒரு பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் தாவா சொத்தை 1ம் பிரதிவாதி தன் மகனான 2ம் பிரதிவாதியாகிய எனக்கு எழுதி வைத்துள்ள விபரம் தெரிந்து வாதி, 2ம் பிரதிவாதிக்கு எவ்வித வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், இந்நிலையில் 2ம் பிரதிவாதி, வாதிக்கும், அவரது வாரிசுகளுக்கும் எதிராக இந்நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், இதனை வாதி தனது வழக்கரையில் மறைத்துள்ளார் என்றும், வாதியின் வழக்கறிஞர் அறிவிப்புக்கு 1ம் பிரதிவாதி 01.09.2008ல் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய யாதொரு முகாந்திரமும் இல்லை என்றும், வழக்கில் சொல்லியுள்ள வழக்கு மூலங்களும் சரியில்லை என்றும், வழக்கு சட்ட காலத்தைக் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நிலைநிற்கத்தல்ல என்றும், எனவே, வாதியின் வழக்கை 2ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6. விசாரணை நீதிமன்றத்தால் வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலித்து இந்த வழக்கினை உரிய முறையில் தீர்மானிக்க ஏதுவாக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. **வாதிக்கு அவர் கோரியுள்ள முதல்நிலை தீர்ப்பாணை கிடைக்கத்தக்கதா?**
2. **வாதி கோரியுள்ள இடைக்கால வருமானம் கிடைக்கத்தக்கதா?**
3. **1ம் பிரதிவாதியின் சுவாதீனத்திலிருந்து தாவா சொத்தை திரும்ப பெறும் உரிமையை வாதி இழந்துவிட்டாரா?**
4. **வேறு என்ன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது?**

7. மேற்கண்ட எழுவினாக்களுக்கு தீர்வு காணும் வகையில் இவ்வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் வாதி திரு. பி. வீரத்தேவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்ள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் திரு. ஒச்சணத்தேவர் என்ற மொக்கையத்தேவர் பி.வா.சா.1 ஆகவும், திரு. எம். ராஜா பி.வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

8. இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்த கனம் விசாரணை நீதிமன்றம் இறுதியாக தாவா சொத்தினை பொறுத்து வாதிகளுக்கு உரிய பகுதியை பொறுத்து அடமான மீட்புகை செய்ய வாதிக்கு உரிமை உள்ளது என்றும், தாவா சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி பேரிலான 15.02.1985ம் தேதிய பதிவில்லா கிரைய ஆவணம் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உரிமை பாத்தியம் இல்லை என்றும், அதன் பேரில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் எழுதிக்கொடுத்த 18.10.2007ம் தேதிய தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றும், தாவா சொத்தை

பொறுத்து அடமானம் எப்போதும் அடமானம் என்றும், தாவா சொத்தினை பொறுத்து வாதி வகையறா ஏற்படுத்திய அடமானத்தினை மீட்க வாதிகளுக்கு உரிமை உள்ளது என தீர்மானித்து வாதியின் அசல் வழக்கினை அனுமதித்து தீர்ப்பளித்துள்ளது.

9. கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தேனி அசல் வழக்கு எண்.180/2008, 31.03.2011ம் தேதி அனுமதித்து பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் பெயரில் பாதிப்புற்ற 2ம் பிரதிவாதி கீழ்கண்ட காரணங்களுக்காக மேல்முறையீட்டினை தாக்கல் செய்துள்ளார் செய்துள்ளார்:– அவை

i) விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தீர்ப்பாணையும் தவறானது, சாட்சியங்கள் மற்றும் சட்டத்திற்கு முரணானது, தவறானது மற்றும் வழக்கின் அனைத்து நிகழ்தகவுகளுக்கும் எதிரானது என்றும், பிரதிவாதியின் வழக்கை ஆதரிப்பதற்கான வாய்மொழி மற்றும் ஆவண ஆதாரங்களை சிறந்த ஆதாரமாகக் கருத்தில் கொண்டு, விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்திருக்க வேண்டும் என்றும், இதன் மூலம் மொத்த செலவுத் தொகையுடன் வழக்கை அனுமதிப்பதில் தவறு செய்திருக்க வேண்டும் என்றும், விசாரணை நீதிமன்றம் பிரதிவாதிகளின் சாட்சியங்களை சரிவர பரிசீலிக்கவில்லை என்றும், மேலும் வழக்கை சட்டப்படி கவனிக்கத் தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கிற்கு தேவையற்ற முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது என்றும், விசாரணை நீதிமன்றம் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு

ஆவணங்களை முறையாக பகுப்பாய்வு செய்யவில்லை என்றும், முந்தைய ஆவணங்கள் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், இது வாதியின் தரப்பில் உண்மை மற்றும் பொருள் உண்மைகளை அடக்குவதற்குத் தெளிவாகிறது என்றும், முந்தைய ஆவணங்களை சமர்ப்பிக்காதது வாதியின் வழக்கிற்கு பாதகமான முடிவை ஏற்படுத்தக்கூடும் என்பதை விசாரணை நீதிமன்றம் உறுதிப்படுத்தத் தவறிவிட்டது என்றும், வாதியால் செலுத்த வேண்டிய வட்டிக்கு பதிலாக 1ம் பிரதிவாதி வழக்கின் சொத்தை வைத்திருக்கிறார் என்பதையும், எனவே, கடந்த கால அல்லது எதிர்கால லாபம் குறித்த கேள்வி எழாது என்பதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும்,

ii) வழக்குச் சொத்து பிரிக்கப்படாததாகவும் காலியாகவும் இருப்பதால், வாதி பிரிவினை மற்றும் பிற நிவாரணங்களுக்கான வழக்கை சரியாக தாக்கல் செய்திருக்க வேண்டும் என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், பதிவு செய்யப்படாத விற்பனைப் பத்திரம் பி.வா.சா.ஆ.6 யை வாதியே ஒப்புக்கொண்டதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், இதுபோன்ற சூழ்நிலைகளில், வாதி அந்த விற்பனைப் பத்திரத்தை கேள்வி கேட்பதிலிருந்து அல்லது சவால் செய்வதிலிருந்து தடுக்கப்பட வேண்டும் என்றும், நடத்தை மற்றும் பதிவுகள் மூலம் தடுத்து நிறுத்தும் நிலை இருப்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், வாதி தனது சொந்த வழக்கைக் கைவிட்டு பிரதிவாதிகளின் வழக்கை நம்பியிருக்க முடியாது என்பதை

விசாரணை நீதிமன்றம் கவனித்திருக்க வேண்டும் என்றும், 1ம் பிரதிவாதியால் நிறைவேற்றப்பட்ட, 18.10.2007ம் தேதியிட்ட, 2வது பிரதிவாதிக்கு ஆதரவாக வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்பதையும், தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட முடியாதது என்பதையும், declaratory relief நிவாரணம் கோராமல், விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், வழக்கு அல்லது மன்றத்தின் சட்டகம் தவறானது மற்றும் சட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட முடியாதது என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் எழுவினாக்களை சரியாக வனையவில்லை என்றும், மேலும் காலவரையறை சட்டம் குறித்த எழுவினாவை தீர்ப்பில் விவாதிக்கப்படவில்லை என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பாணையானது தவறானது, குழப்பத்தை உருவாக்குகிறது என்றும்,

iii) அடமானப் பத்திரத்தின் கீழ் செலுத்த வேண்டிய பணத்தை மீட்டெடுப்பதற்காக அடமானதாரர் வழக்குத் தொடர்ந்தது போல், விசாரணை நீதிமன்றம் தவறான முடிவை வழங்கியுள்ளது என்றும், எனவே, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆதாரமற்றது, தவறானது மற்றும் அடமானம் வைத்திருப்பவர் / 1வது பிரதிவாதி மீது பிணைக்கப்படவில்லை என்றும், மேலும் இந்த தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டும் என்றும், அடமானம் / 1வது பிரதிவாதி விசாரணை நீதிமன்றத்தில் சுயாதீனமாக வழக்கை எதிர்த்துப் போராடியதால், மேல்முறையீட்டாளர் அவரை மேல்முறையீட்டு நடவடிக்கைகளில் 2வது பிரதிவாதியாக

வரிசைப்படுத்தியுள்ளார் என்றும், மேலும் அவருக்கு எதிராக எந்த நிவாரணமும் கோரப்படவில்லை என்றும், காலவரையறை சட்டத்தால் இந்த வழக்கு நம்பிக்கையற்ற முறையில் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், பொதுவாக அடமானப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்துடன் கூடிய அடமானத்தின் அசல் தேதியை வரம்பைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், அதைக் கணக்கிடும்போது, வழக்கு காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது என்றும், அடமானம் அல்லது அடமானத்தின் மீதான அடமானம் (மேல் ஈடு பத்திரம்) ஒதுக்குவது வரம்பு காலத்தை நீட்டிக்காது என்றும், இந்த வழக்கில், அசல் அடமானத்தின் தேதி 15.03.1968 ஆகும், எனவே நிர்ணயிக்கப்பட்ட காலம் காலாவதியான பிறகு வரம்பு நடைமுறைக்கு வருகிறது, மேலும் காலம் காலாவதியாகும் போது மீட்டுக்கொள்ளும் உரிமை கிடைக்கும் என்றும், வரம்பு காலம் 30 ஆண்டுகள் என்றும்,

iv) இந்த வழக்கில் வழக்கு 30 ஆண்டுகளுக்கு மேல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த வழக்கு காலவரையறை சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும், பதிவு செய்யப்படாத கிரைய பத்திரம் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், வாதியால் எந்த மேல்முறையீடு அல்லது திருத்தமும் விரும்பப்படவில்லை என்பதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், வாதியால் அனுப்பப்பட்ட அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு விசாரணை நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிடவில்லை என்றும், வரம்பு காலம் முடிந்த

பிறகு, உரிமையை முழுவதுமாக இழந்த 1ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தை மீட்டு மீட்டெடுக்க வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், முந்தைய அடமானத்தின் அசல் தேதி 15.03.1968 என்று குறுக்கு விசாரணையின் போது வாதியே ஒப்புக்கொண்டதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், அடமானத்தின் மீதான அடமானத்தையும் அவரே ஒப்புக்கொள்கிறார் (மேல் ஒற்றுமை பத்திரம்) மேலும் இவை அனைத்தும் வாதி நீதிமன்றத்திற்கு சுத்தமான கைகளுடன் முன்வரவில்லை என்பதை நிரூபிக்கும் என்றும், வழக்குச் சொத்தின் உடைமை, வட்டிக்குப் பதிலாக, வாதியின் பத்தி எண்.8 ல் கூறப்பட்டுள்ளபடி, 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், மேலும் வரம்பு தொடர்பாக கால அளவைக் கணக்கிடுவதில் வாதி தவறான பார்வையை எடுத்துள்ளார் என்றும், சொத்து பிரிக்கப்படாமல் உள்ளது என்பதை வாதி ஒப்புக்கொண்டதையும், தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நிறைவேற்றுவதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், அனைத்து வருவாய் பதிவுகளும் பிரதிவாதிகளின் பெயரில் உள்ளன என்பதையும், அதன் பலத்தின் அடிப்படையில், 2ம் பிரதிவாதி முழு மற்றும் முழுமையான உரிமையாளராக வழக்குச் சொத்தை உடைமையாகவும் அனுபவித்து வருகிறார் என்பதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும்,

v) அவர் 1ம் பிரதிவாதியிடமிருந்து தான செட்டில்மெண்ட் பத்திரத்தைப் பெற்றார் என்றும், வழக்கு மற்றும் வாக்குமூலத்தில் வாதி

முரண்பாடான நிலைப்பாட்டை எழுப்பியுள்ளார் என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் சட்டப்பூர்வமாகவோ அல்லது தார்மீக ரீதியாகவோ அதன் முடிவுக்கு வரவில்லை என்றும், மேலும் எந்த வகையிலும் விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்திருக்க வேண்டும் என்றும், "ஒருமுறை அடமானம் எப்போதும் அடமானம்" என்ற சொற்றொடர், அடமானக் காலம் காலாவதியான பிறகு, காலவரையறை சட்டத்தின்படி, சொத்தை மீட்டெடுப்பதற்கு எழாது என்றும், ஒத்தி வரம்புக்கு உட்பட்டுச் செல்லும்போது, உரிமையை மீட்டெடுப்பதற்கும் வழக்குத் தாக்கல் செய்ய வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், 30 ஆண்டுகளுக்கும் மேலாக பிரதிவாதிகள் வைத்திருந்ததையும் அனுபவித்ததையும், சட்டத்தின் கீழ் சட்டப்பூர்வ காலத்தை விட அவர்களின் உரிமையை நிரூபிக்கும் உரிமையை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்றும், மேல்முறையீடு செய்வதற்கான கால அவகாசம் 08.10.2011 அன்று வந்தாலும், அது தசரா விடுமுறை என்பதால், நீதிமன்றம் 10.10.2011 அன்று மீண்டும் திறக்கப்பட்டு, மேல்முறையீடு அடுத்த வேலை நாளான 10.10.2011 அன்று தாக்கல் செய்யப்படும் என்றும், எனவே அவர் மேல்முறையீடு சரியான நேரத்தில் தாக்கல் செய்யப்படுவதால், அது காலக்கெடுவுக்கு உட்பட்டது அல்ல என்றும், எனவே, 31.03.2011ம் தேதி கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேனி அசல் வழக்கு எண். 180/2008 ல் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை செலவுதொகையுடன் சேர்த்து

ரத்து செய்து, இம்மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. இம்மேல்முறையீடு மேல்முறையீட்டாளரான 2ம் பிரதிவாதி தரப்பில், தாவா சொத்தில் வட்டிக்கு பதிலாக 1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்துள்ளார் என்றும், 1ம் பிரதிவாதி பேரிலான பதிவில்லா 15.02.1985ம் தேதிய கிரைய ஆவணத்தை வாதி ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், எனவே 15.02.1985ம் தேதிய கிரைய ஆவணம் மூலம் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விசாரணை நீதிமன்றம் தீர்மானித்து, தாவா சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி பேரிலான 18.10.2007ம் தேதியில் தான செட்டில்மெண்ட் செல்லத்தக்க ஆவணம் என தீர்மானிக்க வேண்டும் என்றும், தாவா சொத்தினை பிரிக்கப்படாத சொத்து என்ற நிலையில், வாதி பாகப்பிரிவினை வழக்கிட்டு இருக்க வேண்டும் என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது என்றும், தாவா வழக்கு கால வரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை என்றும், சட்டப்படியும் பொருண்மையின் படியும் தாவா வழக்கு நிராகரிக்கக் கூடியது என்றும், விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்து உத்தரவிட்டிருக்க வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

11. இம்மேல்முறையீட்டில் தீர்வு காண வேண்டிய பிரச்சனைகள் :

1.	**விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய, ரத்து செய்ய முகாந்திரம் உள்ளதா?**

2.	**விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நிலைநிற்கத்தக்கதா?**
3.	**இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?**

12. விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் எவ்வாறு அழைக்கபட்டனரோ அவ்வாறே இம்மேல்முறையீட்டிலும் இதன்கீழ் அழைக்கப்படுவர்.

13. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

<u>பிரச்சனை எண்கள். 1 மற்றும் 2 கான தீர்வு :</u>

14. விசாரணை நீதிமன்றத்தின் முன்னரான இருதரப்பு வாதுரைகள் காணும்போது, தாவா சொத்து விபரத்தில் கண்டுள்ள சர்வே எண்.2343/2 ஏக்கர் 3 செண்ட் 54 புஞ்சை நிலம் வாதியும், வாதியின் தகப்பனார் பூச்சித்தேவருக்கும், வாதியின் சகோதரர் லட்சுமண தேவருக்கும் பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்து கட்டுப்பட்ட சர்வே எண்.2343/2 ல் கண்ட மொத்த சொத்தின் விஸ்தீரணம் ஏக்கர் 3 செண்ட் 54 புஞ்சை நிலத்தை வாதியின் தகப்பனார் பூச்சித்தேவர், வாதி மற்றும் அவர் சகோதரர் லட்சுமணத்தேவர் ஆகிய மூவரும் 13.03.1968 ம் தேதி பேச்சியம்மாள் என்பவரிடம் அடமானம் வைத்துள்ளதும், அதன் பின்னர் அடமானம் பெற்றவரான பேச்சியம்மாள், 28.03.1973 ம் தேதி மாயாண்டி என்பவருக்கு மேடோவர் எழுதி கொடுத்துள்ளார் என்பதும், அதன் பின்னர் மேற்படி மாயாண்டித்தேவர் ராமசாமி என்பவருக்கு 07.02.1975 ம் தேதி அடமான

மேடோவர் எழுதி கொடுத்துள்ளார் என்றும், மேற்படி ராமசாமியிடம் வாதியும் அவர் சகோதரர் லட்சுமணத்தேவரும் ரூ.800/- (ரூபாய் எண்ணூறு மட்டும்) பெற்றுக்கொண்டு 24.02.1975 ம் தேதிய அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளனர் என்றும், பின்னர் மேற்படி ராமசாமி 23.03.1977 ம் தேதி இந்தநிர் 1ம் பிரதிவாதிக்கு ரூ.1,500/- (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) மேடோவர் எழுதி கொடுத்துள்ளதையும், அதன் பின்னர் 1ம் பிரதிவாதியிடம் இருந்து ரூ.800/- (ரூபாய் எண்ணூறு மட்டும்) வாதியும் அவரது சகோதரர் லட்சுமணத்தேவர் பெற்றுக்கொண்டு, 1ம் பிரதிவாதி பெயரில் வாதியும் அவர் சகோதரர் லட்சுமணனும் 25.03.1977 ம் தேதி ஈடுமேல் பத்திரம் பதிவு செய்து கொடுத்திருப்பதையும், சர்வே எண்.2343/2 ல் கண்ட மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 3 செண்ட் 54 ல் வாதியின் சகோதரர் லட்சுமணத்தேவர் தனக்குரிய பிரிவினை இல்லாத ஏக்கர் 1 செண்ட் 27 நிலத்தினை பொறுத்து 01.09.1979 ம் தேதி மீட்டு, அன்றே 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதையும், இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். மேற்படி சங்கதிகளை பி.வா.சா.ஆ.1 – 28.03.1973 ம் தேதி மாயாண்டித்தேவருக்கு மேடோவர் எழுதி கொடுத்த ஒத்தி, மேடோவர், பி.வா.சா.ஆ.2 – 07.02.1977 ம் தேதி மாயாண்டித்தேவர், ராமசாமித்தேவருக்கு எழுதி கொடுத்த மேடோவர், வா.சா.ஆ.1 / பி.வா.சா.ஆ.3 – 23.03.1977 ம் தேதி 1ம் பிரதிவாதி ஒச்சணத்தேவர், ராமசாமிக்கு எழுதி கொடுத்த ஒத்தி மேடோவர், வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 – 25.03.1977 ம் தேதி 1ம் பிரதிவாதி ஒச்சணத்தேவருக்கு, வாதியும் அவர் சகோதரர் லட்சுமணத்தேவர் எழுதிக்கொடுத்த ஒத்தி மேல் பத்திரம் வா.சா.ஆ.3 / பி.வா.சா.ஆ.5 –

01.09.1979ம் தேதி வாதியின் சகோதரர் லட்சுமணத்தேவர் தனக்காகவும் தன் மைனர் மகளுக்காகவும் தாவா சொத்து கட்டுப்பட்ட சர்வே எண்.2343/2 ஏக்கர் 3 செண்ட் 54ல் தனது பாகமான பிரிவில்லாத ஏக்கர் 1 செண்ட் 27 பொறுத்து எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் ஆகியவை மூலம் அறிய முடிகிறது.

15. வாதி தரப்பில் தாவா சொத்து கட்டுப்பட்ட சர்வே எண்.2343/2ல் கண்ட மொத்த சொத்தின் விஸ்தீரணம் ஏக்கர் 3 செண்ட் 54 இடத்தினை பொறுத்து வாதியின் தந்தை பூச்சித்தேவர், வாதி மற்றும் வாதியின் சகோதரர் லட்சுமணத்தேவர் ஆகியோர் ஏற்படுத்திய அடமானத்தினை பொறுத்து வாதி சகோதரர் லட்சுமணத்தேவர் தனது பங்கினை பொறுத்து மீட்டு, 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 / பி.வா.சா.ஆ.5 மூலம் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், வாதி தரப்பிலான மீதமுள்ள சொத்தினை பொறுத்து அடமானத்தொகை செலுத்தி அடமானம் மீட்க 1ம் பிரதிவாதியிடம் அணுகியதில், 1ம் பிரதிவாதி தொகையினை பெற மறுத்துவிட்டார் என்றும், எனவே, தாவா சொத்தை பொறுத்து அடமானம் மீட்புகைக்காக 1ம் பிரதிவாதிக்கு வாதி தரப்பில் வா.சா.ஆ.6 – 30.03.2008ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அது திரும்ப வந்துவிட்டதால் அதன் பின்னர் மீண்டும் வா.சா.ஆ.7 – 22.08.2008ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், அதனை 1ம் பிரதிவாதி தரப்பில் பதில் ஏதும் இல்லை என்றும், தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில், தாவா சொத்தினை 1–ம் பிரதிவாதி வா.சா.ஆ.4 / பி.வா.சா.ஆ.11 – 18.10.2007ம் மூலம் 2ம்

பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்த உரிமை இல்லை என வாதி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. மாறாக, சர்வே எண்.2343/2ல் கண்ட ஏக்கர் 3 செண்ட் 54ல் பிரிவினை இல்லாத ஏக்கர் 1 செண்ட் 27 நிலத்தினை வாதியின் சகோதரர் லட்சுமணத்தேவர் வா.சா.ஆ.3 / பி.வா.சா.ஆ.5 மூலம் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பின்னர், மீதமுள்ள தாவா சொத்தினை பி.வா.சா.ஆ.6 – 15.02.1985ம் தேதிய ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதிக்கு வாதி கிரையம் செய்து கொடுத்து, அது முதல் சர்வே எண்.2343/2 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, அவர் பெயரில் பட்டா உட்பட வருவாய்த்துறை ஆவணங்கள் ஏற்பட்டு, அவர் அனுபவித்து வரும் சொத்து என்பதும், தாவா சொத்தினை பொறுத்து 2ம் பிரதிவாதி பெயரில் 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.4 / பி.வா.சா.ஆ.11 எழுதிக்கொடுக்க உரிமை உள்ளது என்றும், தாவா வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்வாதிடப்பட்டுள்ளது.

16. தாவா சொத்தினை பொறுத்து வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 பிரகாரம் 1ம் பிரதிவாதி அடமானம் பெறுநர் என்றும், அவருக்கு தாவா சொத்தில் உரிமை பாத்தியம் இல்லை என வாதி தரப்பில் வழக்கிடப்பட்டுள்ளது. மாறாக, தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் வாதி எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.6 – 15.02.1985ம் தேதிய பதிவில்லா கிரைய ஆவணம் பிரகாரம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என எதிர்வழக்காடப்பட்டுள்ளது. தாவா சொத்தினை பொறுத்து வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 பிரகாரம் அடமானம் பெறுநர் என்பதை 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 ஏற்படுத்தப்பட்ட

பின்னர் பி.வா.சா.ஆ.6 வாதி, 1ம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த 15.02.1985ம் தேதிய பதிவில்லா கிரைய ஆவணம் பிரகாரம் தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியம் என எதிர்வாதிடப்பட்டுள்ளது.

17. தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரிலான பி.வா.சா.ஆ.6 – 15.02.1985ம் தேதிய கிரைய ஆவணம் பதிவில்லா கிரைய ஆவணம் ஆகும். வாதி தரப்பில் பி.வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தை மறுத்துள்ளனர். வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட வாதி தனது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில், "1ம் பிரதிவாதி தனது தம்பியிடம் வாங்கிய பாதி சொத்துக்கு தனது பெயருக்கு பட்டா வாங்கி கிஸ்து செலுத்தி வந்தார் என்றால் சரிதான். மீதமுள்ள என்னுடைய பாதி பங்கை பொறுத்து 15.02.1985ல் 1ம் பிரதிவாதிக்கு நான் ரூ.3,000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) க்கு பதிவில்லா கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல". என சாட்சியமளித்துள்ளார். வா.சா.1 சாட்சியத்தில் தெளிவாக 1ம் பிரதிவாதி பெயரிலான பி.வா.சா.ஆ.6 – 15.02.1985ம் தேதிய பதிவில்லா கிரைய ஆவணத்தை மறுத்துள்ளார். இந்நிலையில், பி.வா.சா.ஆ.6 பதிவில்லா கிரைய ஆவணம் வாதியால் ஏற்படுத்தப்பட்டது என்பதை 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை.

18. மேலும், தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரிலான பி.வா.சா.ஆ.6 – 15.02.1985ம் தேதிய கிரைய ஆவணம் பதிவில்லா ஆவணம் (வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது). பதிவு சட்டம் பிரிவு 17 – ன்படி பி.வா.சா.ஆ.6 கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். பி.வா.சா.ஆ.6 பதிவு செய்யப்படாத காரணத்தால்,

அதன் பெயரில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் எழாது. எனவே, தாவா சொத்தினை பொறுத்து பி.வா.சா.ஆ.6 பேரில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் எழாததால் அதனை 2ம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ.4 / பி.வா.சா.ஆ.11 மூலம் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்த 1ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. வா.சா.ஆ.4 / பி.வா.சா.ஆ.11 பேரில் 2ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் எழாது.

19. பி.வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.4 / பி.வா.சா.ஆ.11 அடிப்படையில் தாவா சொத்தில் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் பாத்தியம் இல்லை. தாவா சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 பேரிலான அடமான பெறுநர் மட்டும் ஆவார். தாவா சொத்தினை பொறுத்து வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 அடமானத்தில் வாதியின் பங்கினை மீட்க வாதி உரிமை உடையவர் ஆவார்.

20. பிரதிவாதிகள் தரப்பில், வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என எதிர்வாதிடப்பட்டுள்ளது. தாவா சொத்தை பொறுத்து வாதியும் அவர் தந்தை பூச்சித்தேவர், அவர் சகோதரர் லட்சுமணத்தேவர், பேச்சியம்மாளிடம் 13.03.1968ம் தேதி அடமானம் ஏற்படுத்தியுள்ள போதிலும், அதன் பின்னர் மேற்படி அடமானம் பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2, வா.சா.ஆ.1 / பி.வா.சா.ஆ.3, வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 மூலம் அடமானம் மேடோவர் ஏற்பட்டு, இறுதியாக வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 பேரில் 1ம் பிரதிவாதி பெயரில் வாதியும் அவர் சகோதரர் லட்சுமணன் மூவரும் மேடோவர் செய்து கொடுத்துள்ளனர். வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4

அடமானம் மேடோவர் 25.03.1977 ம் தேதி 3 ஆண்டுகளுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 அடமான காலம் 3 வருடம், 24.03.1980 ம் தேதியில் முடிவடைகிறது. காலவரையறை சட்டம் சரத்து 61 (a) பிரகாரம் அடமானத்தின் பெயரிலான சுவாதீன மீட்புக்கு, அடமான மீட்பு எழுந்த 30 வருடத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். அதன்படி வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 அடமான காலம் முடிவுறும் நாளான 24.03.1980 ம் தேதியில் இருந்து 30 வருடத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல அடமான சொத்தான தாவா சொத்தை பொறுத்து 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் ஏற்படுத்திய வா.சா.ஆ.4 / பி.வா.சா.ஆ.11 – 18.10.2007 ம் தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணம் வாதிக்குத் தெரிந்து, கால வரையறை சட்ட சரத்து 61 (b) – ன்படி 12 வருடத்திற்குள் வழக்கிட வேண்டும். வாதி தரப்பில் இவ்வழக்கு வா.சா.ஆ.4 / பி.வா.சா.ஆ.11 ஏற்பட்டது குறித்து வாதிக்குத் தெரிந்த ஒரு வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, தாவா வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் எதிரிடை அனுபவ பிரகாரம் பாத்தியப்பட்டது என எதிர்வாதம் முன்வைக்கப்பட்டது. தாவா சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.6 மூலம் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என எதிர்வழக்காடும் பிரதிவாதிகள், எதிரிடை அனுபவம் பாத்தியபடி பாத்தியப்பட்டது என எதிர்வாதத்தை முன்வைக்கப்பட்டுள்ளது. எதிரிடை அனுபவம் கேட்க வேண்டும் எனில், தாவா சொத்து வாதிக்கு

பாத்தியம் என ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். இவ்வழக்கில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதல்ல, பி.வா.சா.ஆ.6 பிரகாரம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என எதிர்வழக்காடியுள்ள நிலையில், எதிரிடை அனுபவம் என்ற எதிர்வாதம் ஏற்புடையதல்ல. மேலும், தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி அனுபவம் வா.சா.ஆ.2 / பி.வா.சா.ஆ.4 ன் பேரில் அடமானப் பெறுநர் என்ற நிலையில், எதிரிடை பாத்தியம் என்ற எதிர்வாதம் நிராகரிக்கக்கூடிய ஒன்றாகும். எதிரிடை அனுபவம் என்பதன் உள்ளடக்கம் ஏதும் இல்லை.

22. மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய ரத்து செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நிலைநிற்கத்தக்கது என இந்நீதிமன்றம் பிரச்சனை எண்கள். 1 மற்றும் 2 க்கு தீர்வு காண்கிறது.

<u>பிரச்சனை எண். 3 கான தீர்வு :</u>

23. பிரச்சனை எண்கள். 1 மற்றும் 2 தீர்வின் அடிப்படையில் இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் பிரச்சனை எண். 3 க்கு தீர்வு காண்கிறது.

இறுதியாக,

1. இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. கனம் தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.180/2008 வழக்கில் கடந்த 31.03.2011ம் தேதியன்று பிறப்பித்த

தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

GEETHA Digitally signed by GEETHA Date: 2025.12.01 15:00:40 +0530

சார்பு நீதிபதி,
தேனி.

<u>மேல்முறையீட்டாளர் தரப்பு கூடுதல் சாட்சி</u>	– இல்லை
<u>மேல்முறையீட்டாளர் தரப்பு கூடுதல் சான்றாவணம்</u>	– இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சாட்சி</u>	– இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சான்றாவணம்</u>	– இல்லை

GEETHA Digitally signed by GEETHA Date: 2025.12.01 15:00:48 +0530

சார்பு நீதிபதி,
தேனி.

<u>நகல் :</u>
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேனி.